//தேர்வுகள்// //அவசரம்// //தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3557/ஆ4/2024 நாள்.02.09.2024

பொருள் தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் –பள்ளி மாணவர்கள் பெயர் பட்டியல் –EMIS விவரங்கள் அடிப்படையில் தயாரித்தல் மற்றும் மாணவர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்ய அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் –தெரிவித்தல் –சார்பு

பார்வை அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012426 /எப்.1/2024 நாள் 30.08.2024 இவ்வலுவலகம் கிடைக்கப்பெற்ற நாள் 02.09.2024

==============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டம், 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கான பெயர்பட்டியல் (Nominal Roll) தயாரிப்பதற்கு இணைப்பில் காணும் சென்னை, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் தெரிவிதுள்ள வழிமுறைகளின் பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தங்கள் பள்ளிக்குரிய மாணவர்களின் பெயர்பட்டியல் முழுமையாக முடிக்கப்பட்டமைக்கு கீழ்க்காணும் சான்றினை பூர்த்தி செய்து 18.09.2024–க்குள் அரசு மற்றும் நிதியுதவி பள்ளிகள் வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ஆ3 பிரிவில் சமர்பிக்குமாறும் மற்றும் தனியார் பள்ளிகளை பொறுத்தவரை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (தனியார் பள்ளிகள்) சமர்பிக்குமாறும் அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேற்காணும் பணியினை உரிய தேதிக்குள் முடிக்கப்படாமல் இருப்பின் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் /முதல்வரே முழுபொறுப்பாகும், எனவே தனி கவனம் செலுத்தி

தேர்வுக்குரிய அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்யுமாறு மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறை கடிதம்
2. சான்று

// ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை உயர்/மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் வே.மா.

நகல் :

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் ) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

# <u>சான்று</u>

| | | |
|---|---|---|
| பள்ளியின் பெயர் | : | |
| பள்ளி எண் (VLRE0000)Ex: | : | |
| பள்ளியின் தேர்வுமைய எண்:(Ex-246000) | : | |
| பத்தாம் வகுப்பு மொத்த மாணவர் எண்ணிக்கை | : | |
| பதினோராம் வகுப்பு மொத்த மாணவர் எண்ணிக்கை | : | |

எங்கள் பள்ளியில் உள்ள பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவ/மாணவிகளின் 2024-2025-ஆம் கல்வியாண்டிற்கான பெயர் பட்டியல் சார்பான எவ்வித திருத்தங்கள் இன்றி முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

தலைமைஆசிரியர் /முதல்வர்
முத்திரையுடன் கையொப்பம்